## 1. இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்

| | |
|---|---|
| விண்ணப்பிப்பதற்கான தகுதி | **1.** அசல் மதிப்பெண் சான்றிதழ் பாழானது / சேதமடைந்தது<br>**2.** மீள, திரும்பப் பெற வாய்ப்பில்லாத, நிலையில் அசல் மதிப்பெண் சான்றிதழை இழந்த மாணவர்கள். |
| விண்ணப்பிப்பதற்கான விவரம் | மதிப்பெண் சான்றிதழின் இரண்டாம்படி வேண்டின் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ் மீள திரும்பப் பெற வாய்ப்பின்றி இழக்கப்பட்டது என சான்றிதழ் பெற்று இரண்டாம்படி கட்டணம் செலுத்திய கருவூலச் செலுத்துச் சீட்டுடன் மாணவர் கடைசியாக பயின்ற பள்ளியின் தலைமையாசிரியர் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் விண்ணப்பத்தினைப் பரிந்துரை செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். தொடக்ககல்வி பட்டயத் தேர்வு விண்ணப்பதாரர், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.<br><br>தனித்தேர்வர்கள் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ் மீள திரும்பப் பெற வாய்ப்பின்றி இழக்கப்பட்டது எனச் சான்றிதழ் பெற்று இரண்டாம்படி கட்டணம் செலுத்திய கருவூலச் செலுத்துச் சீட்டுடன், அருகிலுள்ள பள்ளித் தலைமை ஆசிரியரிடம் அத்தாட்சிச் சான்றிதழ் பெற்று அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் சமர்ப்பிக்க வேண்டும். |
| கட்டண விவரம் | முதன்முறையாக இரண்டாம்படி கோரி விண்ணப்பிப்பவர்கள் ரூ.505/–<br>இரண்டாவது முறையாக அதாவது மூன்றாம்படி கோரி விண்ணப்பிப்பவர்கள் ரூ.755/– |
| அணுக வேண்டிய அலுவலர்கள் | பத்தாம் வகுப்பு/(SSLC,OSLC)/<br>தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு – இணை இயக்குநர் (பணியாளர்)<br>ஆங்கிலோ இந்தியன், மெட்ரிக் – கூடுதல் செயலாளர்(மெட்ரிக்)<br>மேல்நிலைத் தேர்வு – இணை இயக்குநர் (மேல்நிலை)<br>தொழில்நுட்பத் தேர்வு – கூடுதல் செயலாளர் (தொழில்நுட்பம்)<br>எட்டாம் வகுப்புத் தேர்வு – கூடுதல் செயலாளர் (எட்டாம் வகுப்பு) |